# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
## Provincial Department of Education – Northern Province

### கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை - 2025
### மூன்றாம் தவணைப்பரீட்சை 2025

| | | |
|---|---|---|
| தரம் : 11 | தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் I<br>Communication and Media Studies I | நேரம் :<br>3 மணித்தியாலம் |
| சுட்டெண்:............................... | 87 \| T \| I | மேலதிக வாசிப்பு நேரம்<br>10 நிமிடங்கள் |

**கவனிக்க:**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய கட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

**பின்வரும் வினாக்களில் மிகப் பொருத்தமானவற்றினைத் தெரிவு செய்து புள்ளடித்தாளில் புள்ளடியிடுக.**

01. விடுமுறை காலத்தில் தனது பொழுதினைக் கழிக்க பதுளையிலுள்ள அம்மம்மாவின் வீட்டிற்குச் செல்லலாம் என குமார் எண்ணினான். இக்கூற்று தொடர்புபடுவது
    1) ஆளுள் தொடர்பாடலாகும் 2) ஆளிடைத் தொடர்பாடலாகும்
    3) குழுத் தொடர்பாடலாகும் 4) வெகுசனத் தொடர்பாடலாகும்.

02. வன்செய்திகள் பெரும்பாலும் காணக்கிடைப்பது செய்திப் பத்திரிகையில்
    1) முதல் பக்கத்திலாகும் 2) நடுப்பக்கத்திலாகும்
    3) இறுதிப்பக்கத்திலாகும் 4) தெரிவு செய்யப்பட்ட பக்கத்திலாகும்.

03. உலகில் முதலாவது புத்தகமாகக் கருதப்படுவது
    1) இலத்தீன் இலக்கணம் 2) வஜ்ர சூத்திரம்
    3) இலத்தீன் பைபிள் 4) மாசிகதெக்க

04. இலங்கை வானொலி அலைவரிசைகளின் ஒலிபரப்பில் தற்காலத்தில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வானொலி வகை
    1) சிற்றலை (SW) 2) மத்திய அலை (MW)
    3) பண்பலை (FM) 4) வீச்சுப் பண்பேற்ற அலை (AM)

05. பின்வருவோருள் தொடர்பாடல் பற்றிய கணித மாதிரியை முன்வைத்தவர்
    1) கேட்லெவின் 2) எட்வர்ட் ஹாபர் 3) ஹரோல்ட் டி.லாஸ்வெல் 4) வொரன் வீவர்

06. பின்வருவனவற்றில் முன்னாயத்தம் செய்து பயன்படுத்தப்படுகின்ற எறிவைசார், எறிவையில் ஊடக உபகரணங்கள் முறையே
    1) பல்லூடக எறிவை, பக்கப்புரட்டி 2) மேந்தலை எறிவை, பல்லூடக எறிவை
    3) துரித எறிவை, பக்கப்புரட்டி 4) வழுக்கி எறிவை, துரித எறிவை

07. வானொலி ஊடக நிகழ்ச்சிகளில் தனிநபர் பங்குபற்றும் நிகழ்ச்சிக்கு எடுத்துக்காட்டாக அமைவது
    1) ஜோடிப்பாடல் 2) கதைகூறல் 3) கவிஞர் களம் 4) நேர்காணல்

08. ஒருவர் ஊடாக அதிகமானோருக்குத் தகவல்களைத் தொடர்பாடும் முறைசார் தொடர்பாடல் வழிமுறை

1) கொத்தணி சங்கிலி மாதிரி 2) தனிச்சங்கிலி மாதிரி

3) புறணி பேசுதல் சங்கிலி மாதிரி 4) நிகழ்தகவுச் சங்கிலி மாதிரி

09. துல்லியத் தன்மை + நடுநிலைத்தன்மை + தெளிவான தன்மை = நம்பகத் தன்மை செய்தி அறிக்கையிடல் தொடர்பான மேற்படி சமன்பாட்டினை முன்வைத்தவர்

1) சார்ள்ஸ் அண்டர்சன் டானா 2) போல் டீ மெசுனியர்

3) மில்டன் பிரஸ் 4) கேப்பிரியேல் ஸ்கேத்

10. புலமைச்சொத்துச் சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்படும் உரிமைகள் இரண்டும் பின்வருவனவற்றுள்

1) பொருளாதார உரிமை மற்றும் பண்பாட்டு உரிமை

2) சமூக உரிமைகள் மற்றும் மனித உரிமைகள்

3) ஒழுக்க உரிமைகள் மற்றும் பொருளாதார உரிமைகள்

4) பண்பாட்டு உரிமைகள் மற்றும் ஒழுக்க உரிமைகள்

11. அச்சுப்பதித்தல் கலை ஐரோப்பிய நாடுகள் முழுவதும் விரிவுபடக் காரணமாகத் திகழ்ந்தவர்

1) ஜோஹனஸ் குட்டன் பேர்க் 2) வில்லியம் ஹகஸ்ரன்

3) குக்லியெல்மோ மார்க்கோணி 4) ஜோன் லொகி பெயார்ட்

12. புகைப்படமொன்றில் பிரிதிறன் (Resolution) எனப்படுவது

1) சதுர அங்குலத்தில் காணப்படும் பிக்ஸல் (Pixel) களின் எண்ணிக்கை

2) காட்சித்தள ஆழத்தைத் தெரிவு செய்தல்

3) உயர் மற்றும் தாழ் படல வேகம்

4) ஒளி வழங்கலுக்கான கால அளவு

13. ராமன் தனது வீட்டிலிருந்தபடி தொழிற்சாலையில் தனது பணியாளர்களின் நடத்தைகளை அவதானிக்க விரும்பினார். இதனை மேற்கொள்ள மிகப் பொருத்தமாக அமைவது

1) தொலைஉரு வில்லைகளைக் கொண்ட தொலைக்காட்சிக் கமரா

2) நவீன எண்மானத் தொலைக்காட்சிக் கமரா

3) குறுந்தூர சுற்றுத் தொலைக்காட்சிக் கமரா

4) உருப்பெருக்க வில்லைகளைக் கொண்ட தொலைக்காட்சிக் கமரா

14. இலங்கையிலுள்ள ஊடக உரிமையாண்மையின் இரண்டு முக்கிய வகைகள் எவை?

1) அரசாங்கம் மற்றும் பகுதியளவு அரசுடமைச் சேவை

2) கம்பனிகள் மற்றும் தனியாட்கள்

3) குடும்பங்கள் மற்றும் அரசாங்கம்

4) அரசாங்கம் மற்றும் தனியார்

15. செய்திப் பத்திரிகை குழுவாகப் பணியாற்றுவதன் பெறுபேறாகும். எனினும் அதன் பொறுப்புடமை தங்கியிருப்பது

1) ஆசிரியர் பீடப் பணிப்பாளரிடம் 2) பிரதம ஆசிரியரிடம்

3) பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளரிடம் 4) தலைவரிடம்

16. தொடர்பாடல் பற்றிய ஹரோல்ட் டீ லாஸ்வெல்லின் வரைவிலக்கணத்தின்படி தொடர்பாடல் செயன்முறையின் இறுதி இலக்கு

1) உகந்த வகையில் ஊடகங்களைப் பயன்படுத்துதல் ஆகும்.
2) எதிர்பார்க்கப்படும் மாற்றத்தைக் கொண்டு வருதல் ஆகும்.
3) தொடர்பாடுநரது வகிபங்கினை முழுமையாக்குதல் ஆகும்.
4) பெறுநரின் அனுபவக் களத்திற்கு ஏற்றவகையில் செய்தியொன்றை முன்வைத்தல் ஆகும்.

17. இலங்கையில் வெளியிடப்படும் நூலுக்கு ஐஎஸ்பிஎன் இலக்கத்தினை வழங்குவது

1) தேசிய சுவடிகள் வெளியீட்டுத் திணைக்களம்
2) இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
3) அரசாங்கத் தகவல் திணைக்களம் ஆகும்.
4) தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவைச்சபை ஆகும்.

18. நவீன அலுவலக தொடர்பாடல் ஊடகமாக மின்னஞ்சல் (email) பயன்படுத்தப்படுகின்றது. அஇது சாதாரண அஞ்சல் முறையை விட பெறக்கூடிய அனுகூலமாக அமையாதது

1) நொடிப்பொழுதில் தகவல்களை அனுப்பலாம்.
2) கிடைத்தவர் அதனை வாசிக்கும் வரை அந்த முகவரியில் அது காணப்படாது அழிந்து விடும்.
3) கிடைக்கும் கடிதங்களை கிடைத்த ஒழுங்கில் பாதுகாக்க முடியும்.
4) தேவையற்ற கடிதங்களைத் திறந்து அல்லது திறக்காது அழித்து விட முடியும்.

19. கண்ணன் வங்கி ஒன்றிற்குச் சென்ற போது

- அறைக்குக் குளிரூட்டப்பட்டு இருத்தல்
- நிலத்திற்கு கம்பளம் விரிக்கப்பட்டு இருத்தல்
- முகாமையாளர் சுழல் நாற்காலியில் இருத்தல்

போன்ற நிலைமைகளைக் கண்டான். மேற்படி அவதானிப்புகளுடன் தொடர்புபட்ட தொடர்பாடல் வடிவம்

1) சொல்சார் தொடர்பாடல்
2) சொல் சாரா தொடர்பாடல்
3) முறைசார் தொடர்பாடல்
4) கட்புல செவிப்புல தொடர்பாடல்

20. கல்லூரியின் ஊடக தின விழாவின் அறிவிப்புப் பணி உம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அறிவிப்பின் போது கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள் தொடர்பான ஊடக கழக பொறுப்பாசிரியர் சுட்டிக் காட்டினார்.

A. தொடர்புபடுபவர்களை இனங்காண வேண்டும்.
B. நிகழ்ச்சி நிரலை பொருத்தமாகத் தயாரித்தல் வேண்டும்.
C. சகல தகவல்களைத் தேவையான அளவு விபரமாக போதிய நேர அவகாசத்துடன் தெரிவித்தல் வேண்டும்.

மேற்குறித்த விடயங்களில் மிகவும் உகந்தவை

1) A, B
2) B, C
3) A, C, D
4) B, C, D

21. வாய்மொழி சார்ந்த கருவி வழிப்பட்ட தொடர்பாடல் வடிவமாக அமைவது

1) நேர்காணல்
2) கலந்துரையாடல்
3) உள்ளக தொலைபேசி
4) அறிவித்தல் பலகை

22. சமையல் நிகழ்ச்சி, கவிதையாக்கம், பொருளியல் நிபுணர்களுடனான நேர்காணல் நிகழ்ச்சிகள் தொடர்புபட்டமையும் ஊடக பிரதிநிதித்துவ எண்ணக்கருக்கள் முறையே

1) பொருளாதார பிரதிநிதித்துவம், சமூக பிரதிநிதித்துவம், அழகியல்சார் பிரதிநிதித்துவம்

2) சமூக பிரதிநிதித்துவம். அழகியல்சார் பிரதிநிதித்துவம், பொருளாதார பிரதிநிதித்துவம்

3) அழகியல்சார் பிரதிநிதித்துவம், சமூக பிரதிநிதித்துவம், பொருளாதார பிரதிநிதித்துவம்

4) சமய ஒழங்கு பிரதிநிதித்துவம். சமூக பிரதிநிதித்துவம், பொருளாதார பிரதிநிதித்துவம்

23. தூர உள்ள பொருட்களை படம் பிடிப்பதற்கும், அதிக எண்ணிக்கையான நபர்களை உள்ளடக்கிய வகையில் படம் பிடிப்பதற்கும் பொருத்தமாக அமையக்கூடிய வில்லை வகைகள் முறையே

1) அகலவில்லை, சூம் வில்லை
2) அகலவில்லை, மைக்றோ வில்லை

3) சூம் வில்லை, அகல வில்லை
4) மைக்றோ வில்லை, அகலவில்லை

24. புரொட் சீட் (Broad Sheet) செய்திப் பத்திரிகைகள் பற்றிய மிகவும் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1) அவை வன்செய்திகளையே அதிகம் கொண்டிருக்கும்.

2) அதிக எண்ணிக்கையிலான மென் செய்திகள் இச்செய்திப் பத்திரிகைகளில் காணக்கிடப்பனவாகும்.

3) பெரும்பாலான தேசிய மட்டச் செய்திப் பத்திரிகைகள் இந்த அளவினதாகும்.

4) வரையறுத்த எண்ணிக்கையான மக்களை இச்செய்திப் பத்திரிகை வடிவம் இலக்குக் கொள்கின்றது.

25. தொலைக்காட்சி அலைவரிசையொன்றை ஸ்தாபித்தலில் அதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெறும் போது நேரடியாக அதனுடன் தொடர்புபடும் நிறுவனம்

1) வெகுசன ஊடக அமைச்சு

2) தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

3) அரசாங்கத் தகவல் திணைக்களம்

4) ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம்

26. நிறைவேற்று அதிகாரி ஒருவரால் அவரது கையொப்பத்துடன் பதவி முத்திரையிடப்படுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைவது

1) அது பாதுகாப்பைத் தருகின்றது என்பதாகும்.

2) அது நம்பகத்தன்மையைத் தருகின்றது என்பதாகும்.

3) அது சட்ட வலுவை குறைக்கின்றது என்பதாகும்.

4) அது ஏற்றக்கொளள்ப்படுதலையும் பொறுப்புடமையையும் உறுதிப்படுத்துகின்றது என்பதாகும்.

27. பெற்றுக்கொள்ளப்பட்ட புகைப்படமொன்றை அக்கணமே பார்வையிடக்கூடியவாறு கிடைக்கப்பெறுவது

1) தனிவில்லை எதிர் விம்பக் கமரா (SLR) புகைப்படம் மூலமாகும்.

2) புகைப்படத்தின் உரு பதிவுக் கோப்பு மாதிரி மூலமாகவாகும்.

3) இலக்கமுறை புகைப்படக்கலை மூலமாகவாகும்.

4) இரசாயன முறைப் புகைப்படக்கலை மூலமாகவாகும்.

28. பார்வையின் தொடரறாத் தன்மை என்பது

1) கண்ணிற்கும் அசையும் உருவத்திற்குமான இடைவெளியின் அடிப்படையிலானது ஆகும்.
2) அசையும் உருவமொன்றை ஒரே நிலையிலிருந்து பார்க்கும் போது நிகழ்த்தப் பெறுவது ஆகும்.
3) உருவத்தின் அசையும் வேகம் மற்றும் அதனைப் பார்ப்பதற்குத் தேவையான ஒளியளவு ஆகியவற்றைத் தீர்மானிப்பது ஆகும்.
4) வேகமாக அசையும் உருவத்தின் நிலைகளுக்கிடையேயான இடைவெளியை ஒருவர் காணமுடியாமல் உள்ள போது நிகழ்த்தப் பெறுவது ஆகும்.

29. வடமாகாணத்தில் திருத்த வேலைகளுக்காக அடுத்துவரும் நாளில் மின்தடை அமுல்படுத்தப்பட வேண்டியிருந்தது என இலங்கை மின்சார சபை தீர்மானித்தது. இதனை உடனடியாக அறிவிக்க மிகப் பொருத்தமான வழிமுறையாக அமைவது

1) பல சுவரொட்டிகளை ஒட்டுதல்
2) இலத்திரனியல் 'ஊடகங்கள் வழியாக ஒலி / ஒளிபரப்புச் செய்தல்
3) ஒன்று கூடல் மண்டபத்திலுள்ள அறிவிப்புப் பலகையில் அறிவித்தற் பிரசுரம் ஒன்றை ஒட்டுதல்
4) ஒலி பெருக்கியுடனான நடமாடும் சேவை ஒன்றினால் அறிவப்புச் செய்தல்.

30. தூண்டற் பேற்றுச் செயன்முறையுடன் மிகவும் தொடர்புடையன

1) கண், காது, நாக்கு, மூக்கு, உடல்
2) முகம், வாய், கைகள், கால்கள், தலை
3) மூளை, கண், காது, மூக்கு, உடல்
4) துர்நாற்றம், நறுமணம், சுவை, கசப்பு, சுத்தம்

31. வகுப்பறையில் காட்சி உபகரணங்களைப் பயன்படுத்தும் நோக்கங்களில் பொருத்தமற்றது

1) நீண்டநேரம் எடுத்துக் கொள்வது
2) யதார்த்தமான சூழலை பெற்றுத் தருவது
3) ஆர்வத்தை உருவாக்குவது
4) உள்ளடக்கத்தை ஆழமாக உணர்த்துவது

32. சகல பிரஜைகளுக்கும் பேச்சுச் சுதந்திரத்திற்கும் மற்றும் வெளியிடுதல் உட்பட கருத்து வெளியிடும் சுதந்திரத்திற்கும் உரிமையுண்டு. மேற்படி கூற்று குறிப்பிடப்பட்டிருப்பது

1) ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சாசனத்தின் 14ஆம் உறுப்பிரையிலாகும்.
2) இலங்கைப் பத்திரிகைச் சபைச் சட்டத்தின் 19ஆம் உறுப்பிரையின் கீழாகும்.
3) பண்பாட்டுச் சொத்துடமை சட்டத்தின் கீழ் பதிப்புரிமைச் சட்டத்திலாகும்.
4) இலங்கை அரசியலமைப்பின் 14ஆம் யாப்பிலாகும்.

33. பெறுநருடன் அதிக பயனுறுதியுள்ள தொடர்பொன்றைக் கட்டியெழுப்புவதற்கு தொடர்பாடுபவர் தனது உரையாடலின் போது

1) இரு தரப்பினரும் பெறும் நன்மைகளை விளக்க வேண்டும்.
2) நேர்த்தன்மையான மொழியைப் பயன்படுத்த வேண்டும்.
3) பெறுநர் எதிர்பார்ப்பதைப் பிரதானப்படுத்த வேண்டும்.
4) தரமான பேச்சு மொழியைப் பின்பற்ற வேண்டும்.

34. வானொலி ஊடக அறிவிப்பாளர் ஒருவரிடம் எதிர்பார்க்கப்படக் கூடிய பண்புகள்

1) உச்சரிப்பு தெளிவாக இருத்தல், முரண்நிலைகளை உருவாக்குதல்
2) இருவேறு அர்த்தம் வழங்குதல், விடய அறிவு
3) விரைவாகப் பேசுதல், தெளிவான உச்சரிப்பு
4) விரைவாகப் பேசுதல், பக்கச்சார்புள்ளவராகப் பேசுதல்

35. எண்ம புகைப்படக்கருவி ஒன்றின் மூலம் பிடிக்கப்படுகின்ற புகைப்படங்களை அதேநேரத்தில் சேமிக்கப் பயன்படுவது

1) CD (இறுவட்டு
2) மின்நினைவக அட்டை (Memory Card)
3) எதிர் புகைப்படப் படலம்
4)கணினி தற்போக்கு பெறுவழி நினைவகம்(RAM)

36. * சொற்களஞ்சிய விருத்தி
* முன்னாயத்தம்
* செவிமடுத்தல் திறன்

மேற்கூறப்பட்ட அம்சங்கள் சம்பந்தப்படும் தொடர்பாடல் வடிவம்

1) வாய்மொழித் தொடர்பாடல்
2) எழுத்து மூலத் தொடர்பாடல்
3) வாய்மொழியற்ற தொடர்பாடல்
4) கட்புலத் தொடர்பாடல்

37. A பகுதியிலுள்ள உபகரணங்களின் பயன்பாடுகளை காட்டும் B பகுதியின் சரியான ஒழுங்கு

| A | B |
|---|---|
| 1) திகதி முத்திரை இயங்திரம் | A - ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் |
| 2) பதவி இயந்திரம் | B- ஆவணங்களுக்குத் திகதியிடல் |
| 3) இலத்திரனியல் அட்டை | C - தாள்களைப் பிரதியெடுத்தல் |
| 4) றோணியோ இயந்திரம் | D - சட்டரீதியான உறுதிப்படுத்தல் |

1) BDAC
2) ADBC
3) DBCA
4) BADC

38. இலத்திரனியல் சோதனை கருவியின் பயன்பாட்டுடன் தொடர்பு படாத அம்சம்

1) அலுவலகங்களில் தகவல்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு
2) சுப்பர் மார்க்கட் பொருட் பாதுகாப்புத் தேவைகளுக்கு
3) விமான நிலைய பாதுகாப்புத் தேவைகளுக்கு
4) வங்கி பாதுகாப்புத் துறைச் சேவைகளுக்கு

39. ஓரிடத்திலிருந்து எழுத்துமூல, அச்சுமூல விடயங்களை கருவி மூலம் அனுப்பி அவ்வாறான கருவி ஒன்றின் உதவியுடன் இன்னொரு இடத்தில் அதன் நகலை பெறக்கூடிய செயன்முறையுடன் தொடர்புடைய சாதனம்

1) மின்னஞ்சல்
2) தொலைநகல்
3) தந்தி
4) தொலைபேசி

40. முறைசாரா தொடர்பாடல் இயல்புகளாக அமையக்கூடியவை

A. நோக்கம், திட்டமிடலுக்கு உட்பட்டது.
B. நேரவரையறைக்கு உட்படாது
C. திடீரென்று ஒன்று கூடுபவரிடையே இடம்பெறும்
D. ஒழுங்கமைப்புடன் கூடிய செயற்பாடு

1) A மட்டும்
2) B மட்டும்
3) C, D மட்டும்
4) B, C, D ஆகியவை.

(40 x 1= 40 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education – Northern Province

### கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை - 2025
### மூன்றாம் தவணைப்பரீட்சை 2025

| | | |
|---|---|---|
| தரம் : 11 | தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் II<br>Communication and Media Studies II | நேரம் :<br>3 மணித்தியாலம் |
| சுட்டெண்:............................... | 87 T II | மேலதிக வாசிப்பு நேரம்<br>10 நிமிடம் |

**அறிவுறுத்தல்கள்**

- **பின்வரும் வினாக்களில் முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01. எமது பாடசாலை அதிபர் நேற்று நடைபெற்ற காலைநேர ஒன்று கூடலின் போது எமது பாடாசாலை மாணவி அனுஸ்கவி எழுதிய கவிதை செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளதாகக் கூறினார்.

1) அதிபரினால் மேற்கொளள்ப்பட்ட செயற்பாட்டின் தொடர்பாடல் வகை யாது?
2) கவிதை எழுதுவதற்கு மேற்கூறப்பட்ட மாணவிக்கு உதவிய தொடர்பாடல் வகை யாது?
3) கவிதை உள்ளடங்கும் பிரதான தொடர்பாடல் வடிவம் எது?
4) மேற்கூறப்பட்டுள்ள விடயத்திலுள்ள வெகுசன ஊடகம் தவிர்ந்த ஏனைய வெகுசன ஊடகங்கள் இரண்டினைப் பெயரிடுக.
5) மேற்குறிப்பிட்ட கவிதையை ஏனைய வகுப்புக்களிலும் காட்சிப்படுத்துவதற்கு அதிபர், ஆசிரியர் குழாத்தினரிடம் பணித்தார். இதற்குப் பயன்படக்கூடிய உபகரணம் யாது?
6) மேற்காணும் கவிதையானது அரசாங்கத்திற்கு உரித்தான செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டிருந்தது. எனில் அந்நிறுவனம் எதுவாக இருக்கலாம்?
7) மேற்படி செய்திப்பத்திரிகையானது உள்ளடக்கியுள்ள செய்திகளின் பிரதான வகைகள் எவை?
8) மேற்படி செய்திப் பத்திரிகையில் வெளியான கவிதையை வாசிக்க எமது பாடசாலை மாணவரக்ள் அதீத ஆர்வம் காட்டினர். இச் செயற்பாடு செய்தியொன்றின் பெறுமதிைப் பாதிக்கும் காரணிகளுள் எதனுடன் அதீத தொடர்புடையது?
9) செய்தியறிக்கையிடலில் கருப்பொருளை அறிமுகம் செய்வதற்குப் பயன்படுத்தும் பதம் யாது?
10) இலங்கையில் முதன்முலாக வெளியிடப்பட்ட ஆங்கில, தமிழ்,? சிங்களப் பத்திரிகைகளைப் பெயரிடுக. (10 x 2 = 20 புள்ளிகள்)

02. "தொடர்பாடலானது மனித சமுதாயத்தின் மிக முக்கியமான செயற்பாடாகும்"

1) தொடர்பாடல் பற்றிய லாஸ்வெல்லின் மாதிரியிலுள்ள கூறுகள் இரண்டினைப் பெயரிடுக.
2) பெறுநர் வகைப்படுத்தலிலிருந்து முக்கிய பெறுநர் வகைகள் இரண்டினையும் தருக.
3) தொடர்பாடலினால் மேற்கொள்ளப்படுகின்ற அடிப்படைச் செயற்பாடுகள் மூன்றினை விளக்குக.
4) தொடர்பாடல் செயற்பாட்டின் போது பல்வேறு விதமான குறுக்கீடுகள் ஏற்படுகின்றன. குறுக்கீடுகளின் பிரதான வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

03. ‘உலகின் முதலாவது இலத்திரனியல் வெகுசன ஊடகம் வானொலி ஆகும்’

1) ஆசியாவில் முதலாவது வானொலி ஒலிபரப்புச் சேவையை ஆரம்பித்த நாடு யாது?

2) வானொலி ஊடகத்தில் படைப்பாக்கத்துடன் முன்வைக்கப்படக்கூடிய மூன்று நிகழ்ச்சி வடிவங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

3) வானொலிக்கான பிரதி எழுதுவதில் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய பின்வரும் அம்சங்களின் விசேட பண்புகளைத் தனித்தனியாக விளக்குக.

அ) மொழியின் தன்மை

ஆ) செவிமடுக்கும் தன்மை (1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

04. பெறுநர்களை இலக்கு வைத்து படைப்பாக்க ரீதியான நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ஒலி ஒளிபரப்பப் படுகின்றது.

1) படைப்பாக்கமொன்றில் காணப்படும் பண்புகள் இரண்டினைப் பெயரிடுக.

2) தகவல் தொடர்பாடல் செய்யும் போது ஒருவர் கொண்டிருக்க வேண்டிய பிரதான இயலுமைகள் யாவை?

3) படைப்பாக்க ரீதியாக தயாரிக்கப்படுகின்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

4) படைப்பாக்கம் மிக்க தொடர்பாடலில் பயன்படுத்தக் கூடிய வெளியீட்டு விதிகள் நான்கினை உதாரணம் மூலம் விளக்குக. ( 1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

05. ஊடக நுகர்வின் போது விமர்சனமிக்க பெறுநராக இருப்பதனால் ஊடகத்தால் உண்டாக்கக் கூடிய எதிர்மறையான தாக்கங்களை இழிவளவாக்கிட முடியும்.

1) செய்திகள் வாயிலாக முன்வைக்கப்படும் கருத்துக்களினை தீர்மானிக்கும் காரணி ஒன்றினைப் பெயரிடுக.

2) ஊடகத்தின் மீது துலங்கலை முன்வைக்கக்கூடிய முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

3) புதிய ஊடகங்களின் இயல்புகள் மூன்றினை சுருக்கமாக விளக்குக.

4) ஊடகம் வழியாக சமூகத்தில் ஏற்படும் தாக்கங்கள் குறித்து இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

06. தற்கால உலகில் கணினி வெளியீட்டுச் செயல்முறைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகிறது.

1) கணினி வெளியீட்டுச் செயற்பாட்டின் முக்கியத்துவம் இரண்டினைக் குறிப்பிடுக.

2) தகவலைப் பரிமாற்றுவதற்குப் பயன்படுகின்ற தொலைபேசிகளின் பிரதான வகைப்பாடுகள் எவை?

3) இன்றைய காலத்தில் நாம் அனைவரும் கைத்தொலைபேசியினை பயன்படுத்துகின்றோம். அதனைப் பயன்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய ஒழுக்கநெறிகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

4) கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் உபகரணங்களைப் பயன்படுத்தும் போது ஏற்படும் அனுகூலங்கள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

07. 1) தொலைக்காட்சி நாடகமொன்றில் பிரதான நடிகரைவிட பிரதான நடிகைக்கு கதைக்கரு சாதகமாக அமைந்தமையால் அது பொதுவாக பேசப்பட்டது. இவ் எண்ணக்கரு எதன்கீழ் விபரிக்கப்படுகிறது?

2) செய்திப் பத்திரிகை நிறுவனமொன்றில் செய்திப் பிரிவில் பணியாற்றுகின்ற நிருபர்களின் பிரதான வகைகளைக் குறிப்பிடுக.

3) நிழற்புகைப்படப்பிடிப்பின் சிறப்பம்சங்கள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

4) டிஜிட்டல் புகைப்படப் பிடித்தலின் சிறப்பம்சங்கள் நான்கினை விளக்குக. (1+2+3+4= 10 புள்ளிகள்)